**Judicial Form No.53**

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவெண்ணெய்நல்லூர்.**

**CC. No.742/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா.1** -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.M.செல்வகோபால் Grade-III,Beanch Clerk, அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | பி.டி.ஓ |
| பெயர். | - | எஸ் நாராயணன், | வட்டம் | - | |
| த/பெ. | - | சண்முகம் | வயது | - | 57 |
| கிராமம் | - | விழுப்புரம் | | | |

<u>**10.01.2025**</u>

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி..மு-ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

நான் தற்போது வட்டார வளர்ச்சி அலுவலராக தமிழ்நாடு பைபர் நெட் கார்ப்பரேசனில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமில் பணிபுரிந்து வருகிறேன். நான் 10.02.2023 முதல் 10.09.2023 வரை வட்டார வளர்ச்சி அலுவலர் கிராம ஊராட்சி முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரிந்தேன்.

2, நான் பணிபுரிந்தபோது எனது அலுவலகத்தின் அவுட் சோர்சின் முறையில் ஆனந்தசேகர் என்பவர் கணிணி உதவியாளராக பணிபுரிந்து வந்தார். மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஒவ்வொரு ஊராட்சியிலும், கொசுமருந்து அடிக்கும் இயந்திரம் வாங்க உத்தரவிட்டதன் அடிப்படையில் ஒவ்வொரு ஊராட்சியிலும் ஊராட்சி தலைவரால் கொசு மருந்து அடிக்கும் இயந்திரம் வாங்கிட வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

3. அதனடிப்படையில் 22 ஊராட்சிகளுக்கு கொசுமருந்து அடிக்கும் இயந்திரம் ஸ்ரீசாய் டிரேடர்ஸ் திருச்சி நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஊராட்சி மன்ற தலைவர்கள் தங்களது டி.எச்.சிக்கு ( Degitial Signature Certificate Key) பயன்படுத்தி மற்றும் உபதலைவரின் டி.எச்.சியையும் பயன்படுத்தி கொள்முதல் செய்ய எனது அலுவலகத்தில் பணிபுரிந்த அவுட் சோர்சின் கணிணி உதவியாளர் ஆனந்தசேகர் அவர்களிடம் தொகையினை சம்மந்தப்பட்ட ஸ்ரீசாய் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு இ-கிராம சுவராஜ் போர்டல் மூலம் மாற்றம் செய்ய ஒப்படைக்கப்பட்டது.

4. அதில் ஆனந்த சேகர் என்பவர் அந்த டிஜிட்டல் கீயை பயன்படுத்தி தனது பெயருக்கு சுமாராக ரூ.15,00,000/-க்கு கூடுதலான தொகையை தன்னுடைய சொந்த கணக்கிற்கு மாற்றம் செய்து கொண்டார்.

5. சம்மந்தப்பட்ட நிறுவனத்தினர் கொள்முதல் செய்யப்பட்ட கொசு அடிக்கும் இயந்திரத்திற்கான தொகை தங்களது நிறுவனத்திற்கு பெறப்படவில்லை என்று தெரிவித்ததின் அடிப்படையில் கணக்குகளை ஆய்வு செய்ததில் ஆனந்த சேகர் கணக்கிற்கு தொகை சென்றுள்ளது. ஐசிஐசிஐ வங்கியின் பாஸ்புக்கின் அடிப்படையில் உறுதிசெய்யப்பட்டது.

6. திரு. ஆனந்தசேகர் அவர்களை 02.09.2023 அன்று நேரடியாக அழைப்பாணை அனுப்பி நேரில் விசாரணை செய்ததில், திரு. ஆனந்த சேகர் மேற்படி தொகையை தனது கணக்கிற்கு வரவு வைத்ததை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் அளித்தார். அவரது வாக்குமூலத்தில் சுமார் ரூ.69,000/- நிலுவை போக மீதி தொகை முழுவதையும் திரு.ராஜா எண்டர்பிரைசஸ் என்ற ஸ்ரீசாய் எண்டர்பிரைசசின் சார்பு நிறுவனத்திற்கு ஆனந்த சேகர் தனது சொந்த கணக்கிலிருந்து ராஜா எண்டர்பிரைசசிற்கு அனுப்பியதற்கான ஆதாரங்களை காண்பித்தார்.

7. நிலுவை தொகை சுமார் ரூ-66,000/- உள்ளது. உடனடியாக அதனை சம்மந்தப்பட்ட நாயனூர் ஊராட்சியில் செலுத்திவிடுவதாக தெரிவித்தார். 15.09.2023 அனறு இத்தொகையை நாயனூர் ஊராட்சியில் செலுத்திவிட்டார். இது தொடர்பாக 04.09.2023 அன்று நேரடியாக மாவட்ட கண்காணிப்பாளர் விழுப்புரம் அவர்களிடம் புகார் மனுவை நான்

கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் **அ.சா.ஆ-1** ஆகும்.

8. இ-கிராம சுராஜ் மூலம் ஊராட்சி கணக்கு எண்.7 லிருந்து ஆனந்தசேகர் என்பவர் கணக்கிற்கு தொகை மாற்றப்பட்டதற்கான பட்டியல் (22 எண்ணிக்கைகள்) **அ.சா.ஆ-2** ஆகும். திரு. ஆனந்தசேகர் என்பவரின் ஐசிஐசிஐ வங்கியின் கணக்கின் வரவு செலவு பட்டியல் **அ.சா.ஆ-3** ஆகும். 21 ஊராட்சிகளுக்கு கொள்முதல் செய்யப்படுவதற்கான ஆணை **அ.சா.ஆ-4** ஆகும். கொசு மருந்து அடிக்கும் இயந்தரம் கொள்முதல் செய்வதற்காக மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் நகல் **அ.சா.ஆ-5** ஆகும். கொசு மருந்து அடிக்கும் இயந்தரம் கொள்முதல் செய்வதற்காக வட்டார வளர்ச்சி அலுவலரின் உத்தரவின் நகல் **அ.சா.ஆ-6** ஆகும். போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பிற்கு போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Judicial Form No.53**

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவெண்ணெய்நல்லூர்.**

**CC. No.742/2024**

2025-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா.2** -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.M.செல்வகோபால் Grade-III,Beanch Clerk, அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | பஞ்சாயத்து தலைவி |
| பெயர். | - | ராஜகுமாரி | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| க/பெ. | - | சக்திவேல் | வயது | - | 38 |
| கிராமம் | - | ஆலம்பாடி, | | | |

**<u>10.01.2025</u>**

எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் கு.வி..மு-ச.பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது ஆலம்பாடி கிராமத்தில் வசித்து பஞ்சாயத்து தலைவியாக பணியாற்றிவருகிறேன். எதிரி ஆனந்தசேகர் என்பவரை தெரியாது. ஆனால் கொசு அடிக்கும் இயந்திரத்திற்கான அவர் பணத்தை எடுத்துக்கொண்டதாகவும், அந்த பணத்தை மீண்டும் செலுத்திவிட்டதாக பி.டி.ஓ ஆபிசில் பேசிக்கொண்டார்கள். எவ்வளவு தொகையை என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பிற்கு போதுமான வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.